# 12 கிறிஸ்தவ மறை பரவுதல்

இயேசு உயிர்த்தெழுந்து பலருக்கு காட்சியளித்த சம்பவங்களை பற்றி முன்னைய பாடங்களில் நீங்கள் அறிந்திருப்பீர்கள் இயேசு உயிர்த்தெழுந்து நாற்பது நாட்களுக்குப் பின் பெத்தானியாவில் ஓர் மலையின்மேல் விண்ணேற்றம் அடைந்தார். அவ்வேளையில் அவர் சீடர்களுக்கு தூய ஆவியானவரை அனுப்புவதாக மிகவும் தெளிவாக வாக்குறுதி அளித்தார் இதனால் பெற்ற வழிகாட்டலின் மூலம் எருசலேம், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடைசி எல்லை வரைக்கும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றார்.




### இயேசு கூறிய இவ்வாக்குறுதி நிறைவேறியது என்பது உங்களுக்குத் தெரியுமா?

அவர் கூறியவாறு பத்து நாட்களின் பின் யூதர்களின் பெந்தக் கோஸ்து பண்டிகையின் நாளாக இருந்தது. சீடர்கள் தூய ஆவியானவரின் வல்லமையை அனுபவித்தனர். அவ்வேளையில் இருந்து கடவுளின் திட்டப்படி அவர்கள் நற்செய்தியை அறிவித்து வல்லமையாக இயேசுவுக்கு சான்று பகர்ந்தனர்.

இன்றைய பாடத்தில் நற்செய்திப் பணியானது சமாரியா வரை எடுத்துச்செல்லப்பட்ட முறையை நாம் கற்றுக்கொள்வோம். இவ்வாறான ஒருசிரமமான பணியில் பிலிப்பு என்பவர் பங்களித்த முறையை கீழே உள்ள மடலை வாசித்து எமக்கு விளங்கிக் கொள்ள முடியும்.



## வாசிப்போம்
## தி.ப.8: 26 - 40

***அன்பான சகோதர / சகோதரிகளே,***

*எனது பெயர் பிலிப்பு. நான் கிரேக்க மொழியைப் பேசும் ஒரு யூதன். நான் இயேசுவைப் பின்பற்றிய ஒருவராக இருந்தேன். இயேசு விண்ணேற்றம் அடைந்து பத்து நாட்களுக்குப் பின் சீடர்களோடு அவரைப் பின்பற்றிய அனைவரும் மேல்அறையில் இறைவனை வேண்டிக் கொண்டிருந்தபோது தூய ஆவியின் வல்லமையால் பெலன்கொண்டு துணிவு பெற்றோம். அவர் கூறியவாறு நாம் அனைவரும் நற்செய்தியை ஏற்றுக்கொண்டு பயமின்றி தூய ஆவியால் நிறைந்து செயல்பட்டோம். சீமோன் பேதுரு என்பவர் திருச்சபையின் தலைவராக இருந்தார். கிரேக்க மொழி பேசும் யூதர்களின் கைம்பெண்களுக்கு அன்றாட பந்திப் பகிர்ந்தளிப்பதற்காக திருத்தொண்டர்களாக ஏழுபேரை தெரிவு செய்து நியமித்தனர். அவர்களில் ஒருவராக நானும் தெரிவு செய்யப்பட்டேன்.*

*ஸ்தேவான் என்பவர் எங்களின் தலைவனாக இருந்தார். அவர் மிகவும் வல்லமையாக நற்செய்தி பணியில் ஈடுபட்டபடியால் சில யூதர்கள் பொறாமை கொண்டு அவரைக் கல்லெறிந்து கொலை செய்தார்கள். ஸ்தேவானின் மரணத்தின் பின் கடவுளைப் பின்பற்றிய மக்கள் அனைவரும் வெவ்வேறு இடங்களுக்குச் சிதறிச் சென்ற போது சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்து வந்தனர். தூய ஆவியானவர் என்னை சமாரியாவிற்கு அழைத்துச் சென்றார். அன்று யூதர்களுக்கும் சமாரியருக்கும் இடையே நட்புறவு இருக்கவில்லை. நான் யூதனாக இருந்தாலும் தூய ஆவியானவர் என்னைப் பெலப்படுத்தி சமாரியப் பகுதியில் இறைபணியில் ஈடுபடுத்தினார்.*

*பிற இனத்தவராக கணிக்கப்பட்ட சமாரிய மக்கள் ஆண்டவரின் நற்செய்தியை ஏற்றுக்கொண்டனர். நோயாளர்கள், முடக்குவாதமுற்றோர், கால் ஊனமுற்றோர் பலரும் குணம் பெற்றனர். தீய ஆவிகளைக்கூட வெளியேற்றுவதற்கு தூயஆவியானவர் எனக்கு உதவி செய்தார்.*

நற்செய்தியை ஏற்றுக்கொண்ட அனைவரும் திருமுழுக்கு பெற்றனர். சமாரியா நகரில் பெரும் மகிழ்ச்சி நிலவியது. பேதுருவும், யோவானும் சமாரியாவிற்கு சென்று அம் மக்களுக்காக இறைவனிடம் வேண்டியபோது அவர்கள் தூய ஆவியின் கொடையைப் பெற்றுக் கொண்டனர்.

அதன் பின் ஆண்டவரின் தூதன் என்னோடு பேசி எருசலேமில் இருந்து காசா நோக்கி செல்லும் பாதைக்கு போகும்படி கூறினார். தூதனின் வார்த்தைக்கு கீழ்படிந்து அப்பாதைக்கு சென்றேன்.

ஆச்சரியம்! ஒரு பாலை நிலப் பாதையில் தேரில் அமர்ந்து பயணம் செய்யும் ஒரு மனிதனை நான் கண்டேன். தூய ஆவியானவர் அந்தத் தேரை நெருங்கிச் செல்லுமாறு எனக்கு வழிகாட்டினார். தேரில் வந்தவர் கையில் ஒரு மறைநூலை வைத்து உரத்து வாசித்துக் கொண்டிருந்தார்.

***இதோ பாருங்கள்! அவர் வாசித்த எசாயா நூலின் ஒரு பகுதி.***

“அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட
ஆட்டுக்குட்டிபோலும் உரோமம்
கத்தரிப்போன் முன்னிலையில்
கத்தாத செம்மறிபோலும்
அவர் தம் வாயைத் திறவாதிருந்தார்.
தாழ்வுற்ற நிலையில் அவருக்கு
நீதி வழங்கப்படவில்லை. மண்
உலகில்
இவற்றை அகற்றி, மக்களின்
பாவங்களுக்காக
மரணத்தை ஏற்றார்.”

எசாயா 53:7-8

இந்த வார்த்தையைக் கேட்டபோது அவருடன் கதைப்பதற்கு தூய ஆவியானவர் என்னை ஈடுபடுத்தினார். நான் தேரின் அருகில் ஓடிப்போய் அவர் வாசிப்பது விளங்குகின்றதா எனக் கேட்டேன். (''யாராவது விளக்கிக்கூறாவிட்டால் எவ்வாறு என்னால் விளங்கிக் கொள்ள முடியும்?) எனக் கூறினார்.



படம் 12:1 காசாவுக்கு செல்லும் வழியில் பிலிப்பும் எத்தியோப்பிய அரச அலுவலரும்.

தேரில் ஏறி தன்னோடு அமருமாறு என்னை அழைத்தார். தூய ஆவியின் வழிகாட்டலின் மூலம் அந்த அழைப்பை ஏற்ற நான் தேரில் ஏறி அவர் அருகில் அமர்ந்துகொண்டேன். அவரால் அறிந்து கொள்ளமுடியாத மறைநூல் பகுதியை என்னிடம் தந்தார். அது துன்புறும் பணியாளன் பற்றிய இறைவாக்காகும். அது இயேசுவின் பாடு, மரணம், உயிர்ப்பு மூலமாக பூரணமடைந்தது. அவை அனைத்தையும் நான் அவருக்கு விளக்கிக் கூறியபோது அவர் அதை முழுமையாக ஏற்றுக்கொண்டார். தேரில் போய்க்கொண்டிருந்தபோது வழியில் தண்ணீர் இருந்த ஓர் இடத்தைக் கண்டு அவர் என்னிடம் திருமுழுக்கு பெறவேண்டும் எனக் கூறினார். ''நீர் இயேசுவை ஏற்றுக்கொள்கிறீரா? என நான் கேட்டபோது, அவர் மகிழ்வோடு, ஆண்டவர் கடவுளின் குமாரன் என்பதை விசுவாசிக் கிறேன் எனக் கூறினார். நான் அவ்வேளையிலே அவருக்கு திருமுழுக்கு கொடுத்தேன். அவருக்குள் தூய ஆவியானவர் செயல்படுவதை அவரின்

முகப்பிரகாசத்தினால் அறிந்துகொண்டேன். நற்செய்தியை ஏற்றுக்கொண்ட மகிழ்வோடு தேரில் ஏறி எத்தியோப்பியா நோக்கி பயணமானார்.

**இந்த மனிதன் யார் என்பதை அறிந்துகொள்ள நீங்களும் ஆவலாய் இருப்பீர்கள் அல்லவா?**

அவர் எத்தியோப்பிய நாட்டின் அரசியான கந்தகியின் நிதி அமைச்சர். அவர் வழிபாட்டுக்காக எருசலேம் சென்று மீண்டும் தனது ஊரை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தபோதே நான் அவரை சந்தித்தேன். சமாரியரைப்போன்று ஒதுக்கப்பட்ட மக்களுக்கும் அரச அலுவலருக்கும் நற்செய்தியை அறிவிப்பதற்கு தூய ஆவியானவர் எனக்கு வழிகாட்டியதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். நற்செய்தியானது யூதர்களுக்கு மட்டுமல்ல அனைத்து இனங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதே கடவுளின் திட்டமாகும்.

இப்படிக்கு,
உங்கள் அன்பின்
**திருத்தொண்டர் பிலிப்பு**

திருத்தொண்டர் பிலிப்பு தூய ஆவியானவரின் வழிகாட்டலின் மூலமாக மகிழ்வோடு வல்லமையாக செயல்பட்டார். அதைப்போன்று இன்று நாம் கற்றுக்கொண்ட பாடத்தின் மூலம் எமக்கும் ஓர் நல்ல செய்தி கிடைத்திருக்கின்றது. இந்த சிறப்பான நற்செய்திப் பணியை பிறருக்கு வெளிப்படுத்த இறைவன் எமக்கு பொறுப்பைக் கொடுத்திருக்கிறார். நாமும் அப் பணியைச் செயற்படுத்தி முன்னோக்கிச் செல்வோம். தூய ஆவியானவரின் வல்லமையின் மூலம் எம்மையும் அதற்காக ஈடுபடுத்துவார் என்பது உறுதி.

***மனனவசனம் :***
***ரோமர் 15:13***

எதிர்நோக்கத்தைத் தரும் கடவுள், நம்பிக்கையால் உண்டாகும் பெருமகிழ்ச்சியாலும், அமைதியாலும் உங்களை நிரப்புவாராக! அவ்வாறு தூய ஆவியின் வல்லமையால் நீங்கள் இன்னும் மிகுதியான எதிர்நோக்குடன் வாழ அருள்புரிவாராக!

செயற்பாடு

1. தூய ஆவியானவரின் வழிகாட்டலினூடாக பிலிப்பு எவ்வாறு செயல்பட்டார்?

2. இயேசுவின் போதனையொன்றை கிறிஸ்தவன் அல்லாத உமது நண்பனுக்கு விளக்குவதற்கு புதிய ஏற்பாட்டில் நீர் தெரிவு செய்யும் பகுதியை எழுதுங்கள்.